மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

10—

சேமிப்புக் கிடங்கு

***11631—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் வட்டத்திற்கு என புதிய செயல்முறைக் கிடங்கு கட்ட பொருத்தமாக, வேடப்பட்டி கிராமம், புல எண் 160/1, 160/2 மற்றும் 160/3-ல் உள்ள இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான மூன்று ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, அந்நிலத்திற்கான அரசு நில மதிப்பீடு வட்டாட்சியர் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. நில மதிப்பீடு பெறப்பட்டபின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, கிடங்கு அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட மடத்துக்குளம் தொகுதிக்கு சேமிப்புக் கிடங்கு

2013 அக்டோபர் 24]

கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்ட நிலையில் உள்ளது என்று கூறினார்கள். இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக அந்த இடம் கிடைப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுத்து, அங்கே புதிதாக சேமிப்புக் கிடங்கிற்குக் கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள மடத்துக்குளம் தாலுகாவில் உள்ள நியாய விலை அங்காடிகளுக்கு உடுமலைப்பேட்டை தாலுகா விநியோகக் கிடங்கிலிருந்து தற்போது அத்தியாவசியப் பொருட்கள் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன.*

முற்பகல் 10-55

உடுமலைப்பேட்டை தாலுகா கிடங்கு 2,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்டதாகும். இதில் 1,500 மெட்ரிக் டன் உடுமலைப்பேட்டை தாலுகா அங்காடிகளுக்கும், 1,000 மெட்ரிக் டன் மடத்துக்குளம் தாலுகா அங்காடிகளுக்கும் என பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டு இயக்கம் செய்யப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியுடன், மடத்துக்குளம் தொகுதி, வேடப்பட்டி கிராமத்தில் புதிய கிடங்கு அமைந்தவுடன், தேவையான உணவுப் பொருட்களை மடத்துக்குளம் வட்டத்திலேயே சேமித்து வைத்து, விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. மடத்துக்குளம் தொகுதியானது, ஏற்கெனவே உடுமலைப்பேட்டை தொகுதியிலிருந்து பிரிந்த தொகுதி. உடுமலையிலே இருக்கக்கூடிய அந்தக் கிடங்கிலேயிருந்து

[2013 அக்டோபர் 24

மடத்துக்குளத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்றால், 22 கிலோ மீட்டர் பயணிக்க வேண்டியுள்ளது. மடத்துக்குளம் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே, மாண்புமிகு அம்மா அவர்களால், 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவிலே கட்டடம் கட்டப்பட்டுள்ளது. எனவே, போக்குவரத்துச் சிரமத்தைக் குறைக்கக்கூடிய வகையிலும், அந்த அங்காடியிலே இருப்பவர்களுக்குச் சிரமத்தைக் குறைக்கக்கூடிய வகையிலும், தற்போது தற்காலிகமாக வாடகை கொடுத்து, அந்த இடத்திலே கிடங்கு அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கிடங்கு மடத்துக்குளம் தாலுகாவில் கட்டி, அது பயன்பாட்டிற்கு வரும்வரையில், மாற்று ஏற்பாடாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று மடத்துக்குளம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் கிடங்கினை வாடகைக்கு எடுத்து, அத்தியாவசியப் பொருட்களை இருப்பு வைத்து, விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

பால் குளிரூட்டும் நிலையம்

***4155—திரு. பி.வி. கதிரவன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—